**செய்தி வெளியீடு எண்:710** **நாள்: 25.10.2017**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (25.10.2017) காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதுார் வட்டம், வல்லம்–வடகால் சிப்காட் தொழிற் பூங்கா வளாகத்தில் வானூர்தி உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற் பூங்காவிற்கு அடிக்கல் நாட்டி, டைடல் பார்க் லிமிடெட், வினமன் ஏரோஸ்பேஸ் பிரைவேட் லிமிடெட், மெட்டாலிக் பெல்லோஸ் இந்தியா லிமிடெட், பாஸ்ட்ரிக் மெக்கானிக்கல் லெப்ஸ் பிரைவேட் லிமிடெட், பாலா வர்க்ஸ், டெக்வேர் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட், மினர்வா ஏவியேஷன் சர்வீசஸ், யூனிகான் பிரைவேட் லிமிடெட், வின்டெக் பிரிசிஷன் இன்ஜினியரிங் ஆகிய 9 தொழில் நிறுவனங்களுக்கு நிலஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினார்கள்.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்), மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் தொழில் வளாகங்கள் மற்றும் தொழிற்பூங்காக்களை அமைத்து வருகிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தான் 1992, 2003 மற்றும் 2014 ஆகிய ஆண்டுகளில் மூன்று முறை தமிழகத்திற்கான தொழிற் கொள்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. 1992 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தொழிற் கொள்கையானது, சென்னை மாநகரம் உலகின் மிகப்பெரிய மோட்டார் வாகன உற்பத்தி மையங்களில் ஒன்றாக மாற வழிவகுத்தது. 2003ல் வெளியிடப்பட்ட கொள்கையானது மின்னணுத் தொழில் துறையில் தமிழ்நாட்டில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது.

“தமிழ்நாடு தொழில் துறையில் வளர்ந்து வரும் இந்த தருணத்தில் வானூர்தித் துறை, நானோ தொழில் நுட்பத்துறை போன்ற நவீன துறைகளில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம் என்பதை நான் உணர்ந்திருக்கிறேன்” என்றும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கூறியுள்ளார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் தமிழ்நாடு அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கூற்றினை நனவாக்கும் வகையில், நமது மாநிலத்தின் உற்பத்தி வல்லமைகளையும், தொழில் சூழ்நிலைகளையும் பயன்படுத்தி, வானூர்தி தொழில் சார்ந்த நிறுவனங்களையும், ராணுவத் தளவாடங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களையும் ஊக்குவிக்க தமிழ்நாடு அரசு மிகுந்த

அக்கறையோடு செயல்பட்டுவருகிறது. இந்த இலக்கை நோக்கி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

முதற்கட்டமாக, வானூர்தி உபபொருட்கள் உற்பத்தி நிறுவனங்களுக்கென்று வல்லம்–வடகால் சிப்காட் தொழில் வளாகத்தில் ஒரு பிரத்யேக தொழில் பூங்கா சுமார் 245 ஏக்கரில் 198 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் தமிழ்நாடு அரசின் சிப்காட் மற்றும் டிட்கோ நிறுவனத்தால் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டின் மிக சிறந்த உட்கட்டமைப்பு வசதிகள், அதாவது சிறப்பான சாலை வசதி, நான்கு பெரிய துறைமுகங்கள், 20 சிறிய துறைமுகங்கள், 7 விமான நிலையங்கள் மற்றும் தடையில்லா மின்சாரம் ஆகியவை தமிழ்நாட்டினை எப்போதுமே முதலீட்டிற்கு உகந்த மாநிலமாக திகழ வைத்துள்ளது. இந்த வானூர்தித் தொழிற் பூங்காவில் சுமார் 50 நிறுவனங்கள் தங்களது தொழில் நிறுவனங்களை நிறுவி உற்பத்தியை தொடங்குவார்கள் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. மேலும், உலகின் வானூர்தி நிறுவனங்களை நம் மாநிலத்திற்கு ஈர்க்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் வானூர்தி உப பாகங்கள் உற்பத்தி மற்றும் வடிவமைப்பு நிறுவனங்களுக்கு வலுவூட்டவும், அந்நிறுவனங்களை உலகத் தரம் வாய்ந்த நிலைக்கு உயர்த்தும் முயற்சியிலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இதற்காக டிட்கோ நிறுவனத்தின் மூலம் வானூர்தி பொறியியல் பாகங்கள் வடிவமைத்தல் மற்றும் தயாரிப்பு மேம்பாட்டு நிறுவனங்களுக்கு உதவிடும் வகையில் 10 லட்சம் சதுர அடி பரப்பளவில் ஒரு உயர் கணினி மற்றும் வடிவமைப்பு மையம் (Computing and Designing Centre) 350 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்படவுள்ளது. அந்த வசதிகள், தமிழ்நாட்டில் வானூர்தி தொழில் வளர்ச்சிக்கு பெரிதும் உதவிடும். அந்த மையத்தில், விமான பாகங்கள் வடிவமைப்பு மையம், ஏவியானிக்ஸ் உற்பத்தி வசதி, திறன் மேம்பாட்டு மையம், பொது கிடங்கு வசதி ஆகியவை அமைக்கப்படவுள்ளன. இத்திட்டத்தின் முதற்கட்டமாக, 5 லட்சம் சதுர அடி கட்டட வசதியுடன் 180 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்படவுள்ளது. மேலும், வானூர்திகள் மற்றும் ராணுவ தளவாட உப பாகங்கள் உற்பத்தி நிறுவனங்கள் தங்கள் உற்பத்தி நடவடிக்கைகளை உடனடியாக தொடங்க ஏதுவாக அடுக்குமாடி உற்பத்தி வளாகம் ஒன்றையும் இங்கு நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இந்தப் பூங்காவில் ஐந்தாண்டுகளில், 1000 கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்பட்டு சுமார் 10,000 நபர்களுக்கு நேரடியாகவும் மற்றும் 25,000 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு எம்.சி.சம்பத், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா. பெஞ்ஜமின், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தொழில் துறை முதன்மைச் செயலாளர் திரு. அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., சிப்காட் மேலாண்மை இயக்குநர் திருமதி ஆர்.வாசுகி, இ.ஆ.ப., தொழில் துறை கூடுதல் செயலாளர் திரு. எம்.எஸ். சண்முகம். இ.ஆ.ப., காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி மரகதம் குமாரவேல், சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.பழனி, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பி. பொன்னையா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 25.10.2017**